உ
சிவமயம்

# காரைநகர் மணிவாசகர் சபையின்

# 24வது மணிவாசகர் விழா

காலயுக்தி மார்கழி 23



தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர்,
திருநெறிச் செம்மல், நல்லிசைப் புலவர்,
தருமையாதீனப் புலவர், வித்துவான்,

## திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

அவர்கள் ஆற்றிய

# தலைமையுரை

1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# காரைநகர் மணிவாசகர் சபையின்
## 24 வது ஆண்டு விழாவில்

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர்,
திருநெறிச் செம்மல், நல்லிசைப் புலவர், தருமையாதீனப் புலவர்,

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள்**

## ஆற்றிய தலைமையுரை

# "திருவாசகமும் திருக்கோவையாரும்"

"சைவத்தின் மேற்சம யம்வே றில்லையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லெனும்நான்மறைச்செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார மும்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம்முயிர்த் துணையே"

இலங்கைவாழ் சைவப் பெருமக்களே! இருபத்து நான்கு ஆண்டுகளாக மணிவாசகர் சபையைக் காரைநகரில் மாண்புற நடத்திவரும் பெரியோர்களே! வணக்கம்.

### சைவத்தின் தொன்மை

உலகமனைத்தும் பரவித் திகழ்ந்த தொன்மையான சமயநெறி சைவம். இதுவே உலகின் முதற் சமயமாகும். சைவம் என்பதற்குச் சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடப்பெறும் சமயம் என்பது பொருள்.

நம் சைவசமயம் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு விளங்கிய உலகின் முதல் நாகரிகங்களுள் ஒன்றான சிந்து சமவெளி நாகரிக மக்களாற் பின்பற்றப்பட்டு வந்தது என்பதை அங்கே கிடைக்கும் புதைபொருள்களால் நாம் நன்கு அறியலாம். உலகம் முழுவதும் பரவி விளங்கிய இச் சைவசமயம் இன்று இந்தியப் பெருநாட்டிலும் இலங்கையிலும் நிலைத்து நிற்கிறது.

சைவசமயம் எல்லாச் சமயநூற் கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டும், தான் ஏனைய சமயங்களுள் அடங்காமலும் தனித்தலைமை கொண்டு விளங்குகின்றது.

### சங்க நூல்களில்

எந்நாட்டவர்க்கும் இறைவனாய் விளங்கும் தென்னாடுடைய சிவன் தமிழ் மக்களால் பண்டுதொட்டு போற்றப் பெற்றதைத் தமிழ்நூல்களில் பழமையான சங்கநூல்கள் நன்கு தெரிவிக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. பத்துப்பாட்டுள் ஒன்ருன மதுரைக் காஞ்சியில் ''மாங்குடி மருதனுர் ''இமையா நாட்டத்து உருகெழு பெரியோனுகிய'' சிவ பெருமானுக்கு நடைபெற்ற சிவ வழிபாட்டை இனிது விளக்குகிருர். சங்க நூல்களில் காரியுண்டிக் கடவுள், பிறவா யாக்கைப் பெரியோன், நுதல்விழிநாட்டத் திறையோன், தாழ்சடைப் பொலிந்த அருந்தவத்தோன், முக்கட்செல்வன், கறைமிடற்றண்ணல், நீலமணி மிடற்ருெருவன், நீலமேனிவாலிழை பாகத்து ஒருவன், ஆலமர் செல்வன் முதலிய பல பெயர்களால் சிவபெருமான் தலைமைக் கடவுளாகக் குறிப்பிடப் பெறுகின்ருர்.

## திருக்கோயில்கள்

பண்டைத் தமிழ் மக்கள் பொது இடங்களாகிய ''காடும், காவும், கவின்பெறு துருத்தியும், ஆறும், குளமும், வேறுபல் வைப்பும், சதுக்கமும், சந்தியும், புதுப்பூங்கடம்பும், மன்றமும், பொதியிலும்'' ஆகியவற்றில் இறைவனை வழிபட்டு வந்தனர். இவ்வழிபாட்டிடங்கள் நாளடைவில் திருக்கோயில்களாக ஆயின. காலப் போக்கில் மன்னர்களின் பக்திப் பெருக்காலும், மக்களின் ஆர்வத்தாலும் பெரிய கோயில்களாக வளர்ச்சியுற்றன.

எங்கும் நிறைந்த தண்ணீரை ஊற்றுவழியாகப் பெறுவது போலவும், பசுவின் உடம்பிற் பரவியுள்ள பாலை மடியின் வழியாகப் பெறுவது போலவும் இறைவன் திருவருளைத் திருக்கோயில் வழிபாடுகளால்தான் நாம் அடையமுடியும்.

## சைவசமயக் கோட்பாடுகள்

சிவபெருமான் ஒருவனே முழுமுதல் தெய்வம் என்பதும், அவ்விறைவனே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்து உயிர்களை உய்விக்கிருன் என்பதும், உலகங்களையும், உயிர்களையும் அவ்விறைவன் படைத்துக் காத்து அழிப்பது உயிர்களிடத்திலுள்ள ஆணவமலத்தைப் போக்கி, அவைகட்குப் பேரறிவையும், பேரின்பத்தையும் கொடுத்தற் பொருட்டேயென்பதும் சைவ சமயக் கோட்பாடாகும்.

பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களும் என்றும் உள்ள பொருள்களாகும். செம்பிற் களிம்பு போல உயிர்களோடு உடன் தோன்றியது ஆணவமலம். அது உயிர்களின் அறிவை மறைத்து அவைகட்கு அறியாமையைச் செய்கிறது. இம்மலம் கடவுளால் தரப்படும் பல்வகை உடம்புகளானும், கடவுளிடம் அன்பு செய்வதாலும் நீங்குகிறது. உயிர்கள் ஊழ்வினை காரணமாக இன்ப துன்பங்களைத் தம் வாழ்க்கையிற் பெறுகின்றன. ஆணவம் கன்மம் நீங்குதற் பொருட்டு உலகப் பொருள்களும், உடம்புகளுமாகிய மாயையங்கள் கடவுளால்உயிர்கட்குத் தரப் பெறுகின்றன என்பதும் சிவபிரானை வழிபடுவோர் ஊழ் வினைகளினின்று நீங்கிப் பேரறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கடவுளையடைந்து பேரின்பம் நுகர்கின்றனர் என்பதும் சைவசமயத்தின் கடவுள் உயிர், தளை ஆகியவற்றின் கோட்பாடுகளாகும்.

## முத்திற வழிபாடு:

இறைவனை வழிபட மூன்று முறைகள் உள்ளன. அவை குரு, லிங்க, சங்கம வழிபாடு எனப்படும். இம்முறையில் இறைவனை வழிபட்டு வீடுபேறெய்திய ஆன்றோர் வரலாறே திருத்தொண்டர் புராணமாகும். அறுபான்மும்மை நாயன்மார்களுள், குருவழிபாட்டால் முக்தி பெற்றோர் பன்னிருவர், இலிங்க வழிபாட்டால் முக்தி பெற்றோர் முப்பத்தொருவர், சங்கம வழிபாட்டால் முக்தி பெற்றோர் இருபதின்மர் என மூவகைப்படுவர்.

## தோத்திர சாத்திரங்கள்

சைவசமயக் கொள்கைகளை அறிதற்கும் சிவபெருமானை உணர்ந்து வழிபடுவதற்கும் உரிய நூல்கள் பன்னிரு திருமுறைகளாகிய தோத்திரங்களும், திருவுந்தியார் முதலாகிய பதினன்கு சாத்திர நூல்களுமாகும்.

தோத்திரம் - அன்புநூல்

சாத்திரம் - அறிவு நூல் எனக் கொள்ளலாம்.

பன்னிரு திருமுறைகளில் திருஞான சம்பந்தர் அருளிய திருமுறைகள் மூன்று, திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருமுறைகள் மூன்று, சுந்தரர் அருளிய திருமுறை ஒன்று ஆகிய ஏழு திருமுறைகளும் தேவாரம் எனப்படும். மணிவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந்திருமுறை எனப்படும். திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மரால் அருளிச் செய்யப்பெற்ற திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாந் திருமுறையாகவும் கூறப்படும். திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவரால் அருளிச் செய்யப்பெற்ற பல்வகைப் பிரபந்தங்களின் தொகுதி பதினொராந் திருமுறையெனவும், சேக்கிழார் அருளிய பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறை எனவும் கூறப்படும்.

திருவுந்தியார் முதலிய பதினன்கு சாத்திரங்கள் திருவியலூர் உய்யவந்ததேவ நாயனர் முதலிய எண்மரால் அருளிச் செய்யப் பெற்றனவாகும்.

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மைப் பிரகாசம் - வந்தவருள்
பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று"

என்ற வெண்பா இச் சாத்திர நூல்களைத் தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைகள்

திருமுறை என்பதற்குத் தெய்வத்தன்மை வாய்ந்த நூல் என்பது பொருளாகும். நம் சமயநூல்களாகிய பன்னிரு திருமுறைகளும் பன்னிரு சூரியர்களைப் போல விளங்குகின்றன. இவற்றையருளிய இருபத்தேழு அருளாசிரியர்களும், இருபத்தேழு விண்மீன்களைப் போலத் திகழ்கின்றனர். பன்னிரு திருமுறைகளின் தொடக்கவெழுத்தும், நிறைவெழுத்தும் கூடி ஓம் என அமைந்து விளங்குகிறது. திருமுறைகளில் முதலாவது திருமுறையில் முதற் பாடலாகிய ''தோடுடைய செவியன்'' என்ற திருப்பாடல் தகரத்தில் நடமிடும் இறைவனது பிரவண முதல் எழுத்தோடு [ ஓகாரம் ] தொடங்கி நிறைவுப் பாடலின் ஈற்றுச் சீராகிய ''உலகெலாம்'' என்ற சொல்லின் மகர ஒற்றோடு கூடி ''ஓம்'' என்ற பிரணவமாக அமைந்து விளங்குவது திருவருட்பொருத்தமாகும். திருமுறைகளை ஓதுவதே நாம் உய்வதற்குரிய நெறியாகும் என்பதைத் தருமையாதீன முதற்பெருங் குரவராகிய ஸ்ரீகுருஞான சம்பந்தர்

ஆசையறுய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்''

என்றபாடலால் உணர்த்தி யருளுகின்ருர்.

## சமயாசாரியர்

பன்னிரு திருமுறைகளில் தேவாரத் திருமுறைகளை அருளியவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோராவர். திருவாசகம், திருக்கோவையார் ஆகியவற்றை அருளியவர் மணிவாசகராவர். இந்நால்வர் பெருமக்களையும் சமயாசாரியப் பெருமக்கள் எனப் போற்றுவது நம் சமய மரபு புறச்சமய நெறிகளைப் போக்கிச் சைவநெறியை வளர்த்த இந்நால்வர் பெருமக்களும் சைவசமயத்தை இந்நாட்டில் நிலைபெறச் செய்த பெரியோராவர். இவர்கள் திருவவதாரம் செய்யவில்லையானல் என்றொரு கேள்வியை எழுப்பிப் பண்டைத் தமிழ்ச்சான்ருேர் ஒருவர் பாடிய பாடலைப் பார்ப்போம்.

''சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்நம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே''

இப்பாடல், சமயாசாரியர்களே நம் சைவத்தை வாழ்வித்த சான்ருேர் என்ற கருத்தைத் தெளிவு செய்வதைக் காணலாம்.

## சந்தானசாரியர்

மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம், ஆகியோர் சந்தானசாரியர்கள் எனப்படுவர். திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலையில் சிவபெருமான் நந்தி தேவர்க்கருளிய உபதேச நெறியை மண்ணுலகில் வழிவழியாக மக்கட்கு அருளிவரும் இவ்வாசாரிய பரம்பரை மெய்கண்ட சந்தானம் எனப்படும். இப்பரம்பரை தமிழகத்தில், திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம், திருவாவடுதுறையாதீனம் முதலிய ஆதீனங்களாக நின்று நிலவிச் சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் பேணிவருகிறது.

## நால்வகை நெறிகள்

இறைவனை அடைதற்குரிய நெறிகள் நான்கு. அவை, சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும். சமயாசாரியார் நால்வரும் இந்நால்வகை நெறிகளை நமக்கு நன்கு தெளிவு செய்தவர்களாவர்.

திருநாவுக்கரசர்: சரியை நெறியில் நின்றவர். அவரது மார்க்கம் தொண்டுநெறி எனப்படும் தாசமார்க்கமாகும்.

திருஞானசம்பந்தர்: கிரியை நெறியில் நின்றவர். இவரது மார்க்கம் மகன்மைநெறி எனப்படும் சற்புத்திர மார்க்கமாகும்.

சுந்தரர்: யோகநெறியில் நின்றவர். அவர் மேற்கொண்ட மார்க்கம் தோழமைநெறி எனப்படும் சகமார்க்கமாகும்.

மணிவாசகர்: ஞானநெறியில் நின்றவர். அவர் பின்பற்றிய மார்க்கம் நாயகநாயகி பாவம் எனப்படும் சன்மார்க்கமாகும்.

## திருமுறைப் பகுப்பு

பன்னிரு திருமுறைப் பகுப்பு திருவருளால் அமைந்தது. திருமுறைகளைத் திருவருள் துணைகொண்டு பதினொராந்திருமுறை வரை தொகுத்து வகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகளாவர். அநபாய சோழ மன்னன் திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாந்திருமுறையாகச் சேர்த்துப் போற்றியவன் என வரலாறு கூறுகிறது. பன்னிரு திருமுறைப்பகுப்பிற்கும் சிவஞான போதத்தின் பன்னிரண்டு சூத்திரங்களுக்கும் ஒரு இயைபுள்ளது.

சமயாசாரியர்களின் திருப்பெயர்களை ஒற்றுநீக்கி எண்ணிப் பார்த்தால் ஐந்தெழுத்தாக விளங்குதலைக் காணலாம் இவற்றைப் பக்தபஞ்சாட்சரம் என்பர். ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மணிவாசகர் எனச் சொல்லி இவ்வுண்மையை அறியலாம்.

## காலம்:

அப்பரும் சம்பந்தரும், கி. பி. 7 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலும், சுந்தரர் கி. பி. 8 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், மாணிக்கவாசகர் கி. பி. 8 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் வாழ்ந்த பெருமக்களாவர். மணிவாசகர் காலம் கி. மு. மூன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுண்டு என்பாரும் உளர். சமயாசாரியர்களின் பெயர் வரிசை அவர்கள் இறைவன் திருவடிகளை அடைந்த கால அடைவைக் கொண்டு அமைக்கப் பெற்றது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.

## சிவஞானபோதத்தின் எட்டாஞ் சூத்திரமும் எட்டாந் திருமுறையும்

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"

என்பது சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரம். மணிவாசகர் வரலாற்றுக்கும் இச் சூத்திரத்திற்கும் ஒரு இயைபு இருப்பதை நாம் காணலாம்.

அரசிளங் குமரன் ஒருவனை வேடர்கள் கவர்ந்து சென்று தம் குடிலில் வளர்த்து வருகின்றனர். அவனும் அறியாப் பருவத்தில் அவர்கள் உடனுறையப் பெற்றதால் வேடர்களையே தம் உற்றார் பெற்றாராகக் கருதி வாழ்கிறான். சில ஆண்டுகள் கழித்து ஒருநாள் காட்டில் இளைஞனை உள்ள தன் மகனை மன்னன் காண்கிறான். அவனது குணங்குறிகளைக் கொண்டு அவனைத் தன் மகன் என அவனுக்குணர்த்தி வேடர்களிடமிருந்து அவனைப்பிரித்து அழைத்துச் சென்று அரசமாளிகையில் தன்னோடு கூட்டி வாழ்விக்கின்றான். அதுபோல ஐம்புல வேடர்களோடு கூடித் தன் தலைவனை அறியாது மயங்கி நிற்கும் உயிர்களை இறைவன் குருவாக எழுந்தருளி வந்து அவர்களை ஐம்புல வேடர்களிடமிருந்து பிரித்து ஆட்கொண்டு தம் திருவடிகளில் கூட்டுவிப்பான் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். மணிவாசகரை இறைவன் குருவாக எழுந்தருளி வந்து, ஆட்கொண்ட வரலாற்றோடு இந்நூற்பா இணைந்துள்ளதைக் காணலாம். மணிவாசகரது திருவாசகமும், திருக்கோவையாரும் பக்தி இலக்கியங்களிற் சிறந்தனவாக எல்லோராலும் போற்றப்பட்டு வருகின்றன. எல்லாம் வல்ல நடராசப் பெருமான் தம் திருக்கரங்களால் எழுதிப் பேணிய சிறப்புடைய இந்நூல்கள் நம் பிறவிப்பிணியை அகற்றும் மாபருந்தாகும் என்பதைத் திருக்களிற்றுப்படியாரில் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனர்

"பாய்பரியோன் தந்த பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலரால் சொல்செய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளும் தே".

என்று அருளிச் செய்வதாலும், பண்டைச் சான்றோரொருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தொல்லை யிரும்பிறவிச் சூழும்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன்''.

என்று கூறுவதாலும் அறியலாம்.

## திருவாசகம்

திருவாசகம் என்ற பெயர் திருவுடைய சொற்களால் ஆகிய நூல் எனப் பொருள் தருவதாகும். திருவாசகப் பாடல்கள் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் உயரிய ஆற்றல் உடையன. இஃது எல்லா நாட்டவராலும் ஒப்புக் கொள்ளப்பெற்ற உண்மையாகும். ஜி. யூ. போப் திருவாசகத்தைப் படித்துத் தன்வசம் இழந்ததை உலகமறியும்.

''திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்'' எனத் தமிழகத்தில் வழங்கும் பழமொழியும்,

''திருவாசகம் இங்கு ஒருகா லோதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுநர் அன்றி
மன்பதை யுலகில் மற்றையர் இலரே''

என்னும் சிவப்பிரகாச சுவாமிகளின் வாய்மொழியும்

''வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே''

என்னும் இராமலிங்க அடிகளின் அனுபவ மொழியும் கற்பவர் உள்ளத்தை உருகச் செய்து பேரின்ப வெள்ளத்தில் திளைத்து இன்புறச் செய்யும் திருவாசகத்தின் சிறப்பை நன்கு விளக்குவனவாகும்.

தேன் பால் முதலிய உவமைகளானன்றித் திருவாசகத்தின் இயல்பை உள்ளபடி கூறுவதென்றால் ''காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற ஏமமிகும் கற்புடையாள் இன்முகனும் இன்பாயது'' என்று இராமலிங்க அடிகள் திருவாசகத்தின் சுவையை விளக்கிக் கூறுகிறார்.

ஊழிக்காலத்துத் தனிமையைப் போக்கிக் கொள்ளவே சிவபெருமான் திருவாசகத்தைப் படிசெய்து வைத்துக் கொண்டுள்ளானென்று கூறுகின்றார், மனோன்மணீய ஆசிரியராகிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை. அறிவாற் சிவமேயாகிய மணிவாசகர் அருளிய திருவாசகச் சுவடியையே சிவபெருமானுக்க் கருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடும் திருவாசகபூசை தமிழகத்தில் பண்டு தொட்டு இருந்து வருகிறது.

மணிவாசகரின் திருவாசகம் அடிகளுடைய சிவானுபவ நிறைவிற் பொங்கித் ததும்பி வெளிப்பட்ட அமுதவெள்ளமெனலாம். ''காலமுண்டாகவே காதல் செய்துய்மின்'' என்றும் ''மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே'' என்றும் உலகவரை அழைக்கின்றார் மணிவாசகர். மற்றும் திருவாசகத்தைப் பெண் நூல் என்றும், தேவாரத்தை ஆண் நூல் என்றும் கூறுவர். திருவாசகம் மகளிர் விளையாட்டுக்கள் பலவற்றையும் குறித்துப் பாடிய செய்யுள்களைக் கொண்டுள்ளதாலும், நாயக நாயகி பாவத்தில் பாடப்பெற்ற பாடல்களை உடையதாலும் இவ்வாறு கூறப்படுகிறது. ஆயினும் மணிவாசகர் தன்னை நாயகனாகவும், கடவுளை நாயகியாகவும் கொண்டு பாடிய பாடல்களும் நிரம்ப இருத்தலால் இவ்வாறு கூறுதல் பொருந்தாது.

## முதலும் முடிவும்

மணிவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டு நூல்களில் திருவாசகம் ''நமச்சிவாய'' என்ற முத்தி பஞ்சாட்சரத்தைக் கொண்டு தொடங்குகிறது. திருக்கோவையாரின் இறுதிப்பாட்டு ''யாவர்க்கும் ஊதியமே'' என முடிவுறுகிறது. மணிவாசகரது இவ்விரு நூல்களின் முதலையும் முடிவையும் இணைத்தால் ' நமச்சிவாய யாவர்க்கும் ஊதியமே'' என்ற சொற்றொடர் கிடைக்கும். உயிர்கட்கு இறைவனது திருவைந்தெழுத்தே ஊதியம் என்ற உண்மையை இத்தொடர் உணர்த்துவதை நாமறிந்து மகிழலாம்.

## திருவாசகப் பாயிரம்

திருவாசகத்தின் தொடக்கத்திலுள்ள சிவபுராணம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல் ஆகிய நான்கு பாடல்களும் திருவாசகத்தின் பாயிரமாகத் திகழ்வன. கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன்வலியுறுத்தல் ஆகியன திருக்குறளின் பாயிரமாகத் திகழ்தல் போல இப்பாடல்கள் திருவாசகப் பாயிரமாக விளங்குகின்றன. இந்நான்கு பாடல்களும் சைவசித்தாந்தத்துட் கூறப்படும் முப்பொருளை விளக்குவனவாகவும் கொள்ளலாம். முதலிரு பாடல்கள் பதியைப் பற்றியும், மூன்றும் பாடல் பசுவைப் பற்றியும், நான்காம் பாடல் பாசத்தைப் பற்றியும் கூறுகின்றன என்றும் கருதலாம்.

## அணிநலன்

பாடல்களுக்கு அழகுதருவது அணி. திருவாசகத்தில் இத்தகைய அணிகள் பலவிடங்களிலும் பொலிவோடு அமைந்து திகழ்வதைக் காணமுடியும். ஆளுடையஅடிகள் சிவபெருமான் தம்மைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பெருந்துறையில் வந்து ஆட்கொண்டு அருள் புரிந்த சிறப்பை அழகிய முற்றுருவகமாக அருளிச் செய்துள்ளார்.

''பேரின்பமாகிய கடல் ஆசிரியக் கோலமாகிய மேகமாய்த் தோன்றித் திருப்பெருந்துறையாகிய மலையிலேறி எம்பிறவியின் மேல் கோபங்கொண்டு முரசு எறிந்தாற்போன்று அழைப்பொலி யாகிய இடிமுழக்கைச் செய்து, அருள் மொழிகளாகிய மழையைப் பொழிந்தது அதன்பயனாகஞானமாகிய வெள்ளம் பலவிடத்தும்ஓடி அடியார்களாகிய இடத்தை நிறைத்து, மலைபோல் ஓங்கி எம் உள்ளத்தடத்துப் பாய்ந்து, இன்பச் சுழிகளை உண்டாக்கி உருவ வழி பாட்டுணர்வாகிய நீரைப் பலதலங்களிலும் உருவாக்கித் திருக் கோயிலாகிய குளத்தில் நிறைந்தது தொண்டர்களாகிய உழவர்கள் வழிபாடாகிய வயலுள் அன்பாகிய விதையை விதைத்துச் சிவ போகமாகிய விளைவைப் பெருக்கி நுகர்கின்றனர் என்று கூறும் பகுதி நீண்ட முற்றுருவக அணியாக அமைந்து அழகிய பலகருத் துக்களை நமக்கு அளிக்கின்றது. திருச்சதகத்தில் வரும் முற்றுருவ கமொன்றும் நம்மை மகிழ்விக்கிறது.

பிறவியாகிய கடலில் தனியனயகப் பட்ட நான் துன்பங்க ளாகிய அலைகள் தாக்கத் துவண்டு பற்றுக்கோடின்றித் தவித்தேன் மகளிர்மேற் கொள்ளும் மையல், புயலாய் வருத்திற்று, ஆசை என்ற சுறுமீன் வாயை அங்காந்து வந்தது. இவற்றில் அகப்பட்டு மாளாது ஐந்தெழுத்தாகிய புணையை அருளி தம் திருவடிகளாகிய கரையை அடையுமாறு இறைவன் எனக்கு அருள் புரிந்தான் என் கிறார். இவ்வாறு பல பாடல்கள் உவமை, உருவகம் முதலிய அணிநலன்கள் பலவற்றையும் உடையதாய்த் திகழ்கின்றன. அன்றி யும் திருவெம்பாவையில் பெண்கள் மழைவேண்டிப் பாடும் பாடல் அம்பிகையின் தோற்றங்களை மழைத் தோற்றங்களோடு உருவ கித்துக் கூறுகின்றது. ''முன்னிக்கடலை'' எனத் தொடங்கும் பாடல் மழைமுகில் அம்பிகையின் நிறம்போலக் கருநிறமாய்த் தோன்றி யும், அவள் இடைபோல மின்னியும், அவள் அணிந்துள்ள சிலம்பு போல இடித்தும், புருவம் போல வானவில்லைத் தோற்றியும், அவளருள் போலப் பொழிந்தும் வாழ்விக்க வேண்டும் என்ற மைந்து படிப்பவர்க்குப் பெருவிருந்தாயமைகிறது. இவ்வாறே திருப்பாவையில், வைணவப் பெண்கள் மழை வேண்டும் பாடல் மழைமேகம், திருமால் உருவம் போல் மெய்கறுத்தும், அவன் ஆழி போல் மின்னியும், வலம்புரி போல் முழங்கியும், அவன் கோதண் டத்திலிருந்து வெளிப்படும் சரம் போல மழை பொழிந்தும் உல கை மகிழ்விக்க வேண்டுமென்று ஆண்டாள் அருளியுள்ளார். இதனைத் திருவெம்பாவைப் பாடலோடு ஒப்பிட்டு மகிழலாம்.

## இருதயப் பாட்டு

திருவாசகத்தில் கோயில் திருப்பதிகத்துள் வரும் ''இன்றெ னக் கருளி'' என்னும் பாடல் நம் சமய தத்துவத்தை விளக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலாக விளங்குவதால் இதனைத் திருவாசகத்தின் இதயப் பாடல் என்று கூறுவதுண்டு.

இன்றெனக் கருளி இருள்கடிந்து என்னுள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை
யாருன்னை அறியகிற் பாரே''.

பாடலின் பொருள்:- ''எனக்கு அருள்புரியுங் காலம் எய்திய இந்நாளில் என்மேல் கருணை கொண்டு என் உள்ளத்தில் முளைத்தெழுகின்ற ஞாயிறு போன்று, அறியாமை யென்னும் இருளைக் கடிந்து நின்ற நின்செயலைத் தற்போதத்தாலன்றித் திருவருளின் வழியே உணரப் பெற்றேன். உன்னையன்றிப் பிறிதொரு பொருளும் மெய்ப்பொருளாகாமையை உணர்ந்தேன். உயிர் பாசக் கூட்டங்களினின்றும் சிறிது சிறிதாக விலகி, வியாபகநிலை நீங்கிப் பிறிதொரு பொருளை நச்சி அறிதல், இச்சித்தல், அனுபவித்தலின்றித் தன் வயமிழந்து அணுத்தன்மையடைந்து ஒன்றாகுமாறு விளங்கும். திருப்பெருந்துறையில் உறையும் சிவனே! நீ இவ்வுலகப்பொருள்களில் ஒன்றில்லையாயினும், நீஇல்லாத பொருளில்லை அங்ஙனம் இருந்தும் உன்னைக் காண்பவர் எவரேனும் உளரோ? உன்னை அறிபவர் பெரிதும் அரியர்'' என்பதாம்

இங்ஙனம் இத்திருப்பாடல் சைவசித்தாந்த முப்பொருளை அறிவித்து நிற்றலால் இதனைத் திருவாசகத்தின் இருதயமான பாடல் என்பர் அறிஞர்.

## ஐந்தெழுத்தின் பெருமை

கோயில் மூத்த திருப்பதிகத்தின் முதற்றிருப்பாடலாக விளங்கும் ''உடையாள் உன்றன்'' என்று தொடங்கும் பாடல் திருவாசக அன்பர்கள் பலரும் பாராட்டும் சிறந்த பாடலாகும்.

''உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானல் அடியேன்உன்
அடியார் நடுவுள் ளிருக்கும் அருளைப்புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே''

''சிவமும் சக்தியும் வேறல்லர் என்பதை ''உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி'' என்ற தொடரால் குறித்தார். சக்தியின் அகத்தில் சிவமும் சிவத்தின் அகத்தில் சக்தியும் ஒன்று வியாபமாக ஒன்று வியாப்பியமாக நிற்கும் என்பது பொருள். பதி உயிரிடத்து நீங்காது நின்றருள் புரியுமென்பதை ''அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானல் எனற தொடரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளார். 'இருப்பது உண்மையாளுல் என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்று உன்னருள் பெற்று உன்னே அடைந்த அடியார்களுள் நானும் ஒருவனுக இருக்கும் அருளைப் புரிக' என்பது பாடலின் பொருள்.

இப்பாடலில் முதல் மூன்று தொடர்களில் 'உடையாள் உன்றன் நடுவிருத்தல், உடையாள் நடுவுள் நீயிருத்தல், அடியேன் நடுவுள் இருவீரும் இருத்தல் ஆகிய மூன்று தொடர்களும் பஞ்சாக்கரத்தின் பேதங்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பஞ்சாட்சரம் ஐந்து வகையாகக் கூறப்படும். நமசிவாய - தூய பஞ்சாட்சரம்; சிவாயநம - சூக்கும பஞ்சாட்சரம்; சிவாயசிவ - காரண பஞ்சாட்சரம்; சிவ - மகாகாரண பஞ்சாட்சரம்; சி - மகாமனு. பஞ்சாட்சரத்தில் சி - சிவனையும், வ - சக்தியையும், ய - ஆன்மாவையும் குறிக்கும். ''சிவ சிவ சிவ'' என்று இடைவிடாது தொடர்ந்து சொல்வதால் சிவமும் சக்தியும் அகத்தினும் புறத்தினும் அமைந்து நிற்றலை முதலிரண்டு தொடர்கள் குறிக்கின்றன. சிவாய என்பதை அவ்வாறு பலமுறை தொடர்ந்து சொல்வதால் சிவமும் சக்தியும் ஆன்மாவின் அகத்தில் விளங்குதலை மூன்ருவது தொடர் குறிக்கின்றது

## திருவெம்பாவை

திருவாசகத்தில் திருவெம்பாவை மிக்க சிறப்புடைய பகுதி. மார்கழி மாதத்தில் திருவாதிரைக்கு முன்புள்ள பத்து நாள்களும் பன்னிரு திருமுறைகளைத் திருக்காப்பிட்டுவிட்டுத் திருவெம்பாவையையே ஓதல் வேண்டும் என்ற மரபினை யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் குறித்துள்ளார்கள்.

திருவெம்பாவைக்குச் ''சக்தியை வியந்தது'' என்ற தலைப்பு பெரியோர்களால் தரப்பெற்றுள்ளது. பராசக்தியைக் குறித்துப் பெண்கள் நோற்கும் நோன்பை அடிப்படையாகக் கொண்டதாலும், நவசக்திகள் உலக இயக்கத்திற்கு ஒன்றையொன்று பிரேரித்து நிற்கும் தத்துவத்தைத் தெரிவித்தலாலும், எங்கள் பிராட்டி, நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை, எம்மை ஆளுடையாள் முதலிய சொற்ருெடர்களால் அன்னையின் அருள் நலங்களை மணிவாசகர் தெரிவித்தலாலும் திருவெம்பாவை சக்தியை வியந்ததாகக் கொள்ளலாம். ''காதார் குழையாட'' என்ற இப்பாடலில் ''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத்திறம் பாடி ஆடேலோரெம்பாவாய்'' என்று மணிவாசகர் அம்பிகையைத் தனியே விதந்துகூறி வழிபடுவதைக் காணலாம்.

## உயிர்ப்பாட்டு

திருவெம்பாவையின் உயிர்ப் பாட்டாக விளங்குவது ''உங்கையிற்பிள்ளை'' எனத் தொடங்கும் பாடலாகும். இப்பாடலிலேதான் பெண்கள் தங்கள் பாவை நோன்பின் குறிக்கோளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்து இறைவனை வேண்டும் வேண்டுகோள் தெரிவிக்கப் பெற்றுள்ளது. கன்னிப் பெண்கள், சிவபக்தி உடையவர்களே தங்கட்குக் கணவர்களாக அமைய வேண்டுமென்று வேண்டுவதை இப்பாடலிற் காணலாம்.

''உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்குஎங்கோன்! நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோ ரெம்பாவாய்''

இவ்வாறே திருப்பாவையிலும் வைணவப் பெண்கள் கண்ணனைக் கணவனை அடைய விரும்பிப்பாடும் ''சிற்றஞ் சிறுகாலே'' என்ற பாடல் அந்நூலின் உயிர்ப்பாடலாக விளங்குகிறது.

## அம்பிகை தோத்திரம்

தேவார திருவாசகங்கள் சிவபெருமானையே தோத்திரம் செய்யும் திருமுறைகளாகும். இத்திருமுறைகளில் அம்பிகை, விநாயகர், முருகன் ஆகிய தெய்வங்களைக்கூடத் தனியே போற்றுது சிவபெருமானோடு இணைத்துப் பாடுவதைக் காணலாம்.

விநாயகரைப் பாடுவதாகவிருந்தால் ''கணபதிவர அருளினன்''என்றும்,முருகனைப் பாடுவதாக இருந்தால் ''நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்'' என்றும், அம்பிகையைப் பாடுவதானால் ''உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்'' என்றும் அருளிச் செய்வார்கள் நம் ஆசாரியர்கள். ஆனால், மணிவாசகர் தான் திருவெம்பாவையில் முதன் முதலில் அம்பிகை தோத்திரமாக ஒரு திருப்பாடலை அருளிச் செய்கின்றார். அப்பாடல் ''காதார் குழையாட எனத்'' தொடங்கும் பாடலாகும்.

## திருக்கோவையார்

அகப்பொருள் மக்கள் வாழ்க்கையோடு கலந்தது. எல்லாம் வல்ல பரம்பொருளைப் புறப்பொருளாகக் கண்டு வழிபடுவதைக் காட்டிலும் அகப்பொருளாகக் கண்டு வழிபட எண்ணினார் மணிவாசகர். ஞானசம்பந்தர் அப்பர் சுந்தரர் பாடல்களிலும் அகப்பாட்டுக்கள் உண்டு. மணிவாசகர் அகப்பொருளிலக்கியமாக ஒரு நூலையே அருளிச் செய்துள்ளார். அதுதான் திருக்கோவையார் நாயகநாயகி பாவத்தில் பேரின்பத்தை மனித இயல்புக்கு ஏற்றபடி சிற்றின்பப் பொருளாகக் காட்டும் இலக்கியமிது.

திருக்கோவையாரை அந்தணர்கள் வேதம் என்றும் யோகியர் ஆகமம் என்றும், காமுகர் காமநூல் என்றும், தருக்க நூலறிஞர் ஏரணம் என்றும், புலவர்கள் ''சிறந்த இலக்கியம்'' என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவர். தமிழ்ச் சங்கம் என்னும் பொய்கையில் தோன்றி ஞான ஒளியை உடையதாய் நானூறு செய்யுட்களாகிய இதழ்களைக் கொண்டதாய் நூலின் பொருளாகிய மதுவைப் புலவர்கள் வண்டாய் நுகருமாறு சிற்றம்பலவனுகிய கதிரவன் கருணைக் கதிரால் மலர்ந்தது திருக்கோவையாராகிய திருவளர் தாமரை'' எனப் பாராட்டுகின்ருர் அறிஞரொருவர்

## திருவளர் தாமரை

தலைமகன் தலைவியைக் காணுதல் என்னும் பொருளமைந்த காட்சித்துறையில் ஒருபாடலில், தலைவியை ஒரு பூமாலையாக வருணிக்கிருர் மணிவாசகர். திருவளரும் தாமரைப்பூ, நீலோற்பலம், குமிழமலர், கோங்கரும்புகள், காந்தட்பூ ஆகியவற்ருல் இயன்ற மாலையொன்று, அன்னநடை பயின்று மன்மதனது வெற்றிக்கொடி போல விளங்கித் தோன்றுகிறது என்கிருர்.

திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தன் கொண்டோங்கு தெய்வ
மருவளர் மாலையோர் வல்லியின்ஒல்கி அனநடை வாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன்று ஒளிர்கின்றதே

இப்பாடலில் தான்கண்ட தலைவியின் முகத்தைத் தாமரையாகவும், கண்களை நீலப்பூக்களாகவும், மூக்கைக் குமிழம்பூவாகவும்' தனங்களைக் கோங்கரும்புகளாகவும், கைகளைக் காந்தள் மலர்களாகவும் தலைவன் வியந்து பாராட்டுகின்ருன்.

இப்பாடலின் நுட்பப் பொருள்களைச் சிந்திப்போம். திரு கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம். திருவளர் தாமரை என்பதற்குத் திருமகளும் விரும்பும் தாமரை என்பதும், அழகு மென்மேலும் வளரும் தாமரை என்பதும் பொருள். தாமரை - மருதம், காவி - நெய்தல், குமிழ் - முல்லை, கோங்கு - பாலை, காந்தள் - குறிஞ்சி என ஐவகை நிலங்களையும் இணைத்துக் குறிஞ்சிக்குச் சிறப்புக் கூறுவதாய்ப் பாடல் அமைந்துள்ளது. கோங்கிற்குப் பாடலில் அடைமொழியில்லை. ஏனெனில் பாலைக்குத் தனியே நிலமில்லை என்பதைக் காட்டுதற்கு.

மேலும் ஏனைய உறுப்புக்களை அடைகொடுத்துக் கூறிய ஆசிரியர் தனத்திற்கு உவமையாக வந்துள்ள கோங்கிற்கு அடைகொடாமையையே சிறப்பாகக் கொண்டனர் போலும். திருக்கோயில், திருநந்தவனம் எனச் சிறப்பித்தல் போல, இறைவனை திருச்சிவன் என்னுமை போல்வதோர் பெற்றி இது. இன்னோரன்ன பொருட்சிறப்புக்கள் பலவற்றை உள்ளடக்கி நிற்கும் பாடல்கள் பலவற்றைத் திருக்கோவையாரிற் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவியின் கண்கள்

மணிவாசகர் திருவெம்பாவைப் பாட்டுள் மழையின் பல பகுதிகட்கும் அம்மையின் தோற்றப்பகுதிகளை உவமை கூறினாற் போல, திருக்கோவையாரில் தலைவியின் கண்களின் இயல்புகள் பலவற்றுக்கும் தில்லைப் பெருமானின் திருவருள் தொடர்பான பொருள்களை உவமை கூறுகிறார்.

பெண்களின் கண்கள் அகன்றும் கறுத்தும் வெளுத்தும் ஒளி மிகுந்தும் நீண்டும் இருத்தலைப் புலவர்கள் வருணிப்பர். மணிவாசகர், திருக்கோவையாரில் வரும் தலைவியின் கண்களுக்கு இத்தகுதிகள் இருத்தற்குக் கூறும் உவமைகளில் சமயத் தொடர்பான பல பொருள்களை கூறுதல் சுவை தருவதாகும்.

''ஈசற்கு யான்வைத்த அன்பின் அகன்றவன் வாங்கியஎன்
பாசத்திற் காரென்று அவன்தில்லை யின்னொளி போன்ற
-வன்றோள்
பூசத்திரு நீறென வெளுத்து ஆங்கவன் பூங்கழல்யாம்
பேசத்திரு வார்த்தை யிற்பெரு நீளம் பெருங்கண்களே''

யான் விரும்பும் தலைவியின் பெரிய கண்கள் இறைவனிடத்து யான் வைத்த அன்புபோல அகன்றும், அவன் வாங்கிக் கழிந்த எனது பாசம் போலக் கறுத்தும், அவனது தில்லையைப் போல ஒளி மிகுந்தும், அவன் தன் தோள்களில் அணியும் திருநீறு போல வெளுத்தும், அவன் திருவடிகளை யாம் புகழும் திருவார்த்தைகள் போல மிக நீண்டும் விளங்குகின்றன என்பது பாடலின் பொருள்

## விரவிக் கூறல்

மென்மொழியோடு சிறிது வன்மொழியும் விரவிக் கூறித் தலைவன் கருத்தைத் தோழி தலைவிக்குக் கூறுதல் என்பது இத் துறையின் பொருள். களவுக் காலத்தில் தன் குறையைத் தலைவிக்குத் தெரிவிக்குமாறு தோழியைக் கேட்டான் தலைவன். அவள் தலைவியிடம் சென்று, அவர் களவொழுக்கத்தை அறியாதாள் போலத் தெரிவிப்பாள். அம்முறையிலமைந்த திருக்கோவையார்ப் பாடலைப் பார்ப்போம்.

''நீகண் டனையெனில் வாழலை நேரிழை அம்பலத்தான்
சேய்கண் டனையன் சென்றாங் கோரலவன்றன் சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதோர் நாவற்கனி நனி நல்கக் கண்டு
பேய்கண் டனையதொன் றாகி நின்றான் அப்பெருந் தகையே''

''தோழி ஒரு கதை. நீ பார்த்தால் சங்கடப்படுவாய். உயிரோடு வாழாய் தலைவன் ஒருவன் குளத்தின் கரையில் நின்று கொண்டிருந்தான். நாவற் பழம் ஒன்று கரையில் விழுந்தது. ஆண் நண்டொன்று அதனைக் கவ்விக் கொண்டு போய் பெண் நண்டிடம் கொடுத்தது. இதைப் பார்த்த தலைவன் தனக்கு ஒரு துணைவி இல்லையென்று நினைத்தானோ என்னவோ? அப்படியே மயங்கிக் கீழே விழுந்து விட்டான்.'' என்று தோழி தலைவிக்குக் கூறுகின்றாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே கருத்து அகநானூற்றில்,

"அகல்இலை நாவல்உண்டுறை உதிர்ந்த
கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
தாழைவேர்அளை வீழ்துணைக் கிடூஉம்
அலவற்காட்டி நற்பாற் றிதுவென
நினைந்த நெஞ்சமொடு நெடிது பெயர்ந்தோனே"

என்ற பாடலில் குறிப்பிடப்படுவதைக் காணலாம். சேக்கிழார் பெருமானும் சமயத் தொடர்பான உவமைகளைக் கையாளுவதைப் பெரியபுராணத்திற் காணலாம். வானம் இருண்டதற்குச் சேக்கிழார் கூறும் உவமைகளைப் பின்வரும் பாடலில் பாருங்கள்,

"பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள் வல்வினை யும்அரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சு மென்ன இருண்டது நீண்டவான்.

என்பது பெரியபுராணப் பாடல்.

## வாழ்வியற் பண்பாடு

தலைவன் தலைவியை யாரும் அறியாமல் உடனழைத்துச் சென்றான். செவிலி தன்மகளைத் தேடிப் போகிறாள். எதிரே கணவனும் மனைவியுமாக இருவர் வருகின்றனர். செவிலி முதலில் தன் மகள் அவளே என்று நினைந்தாள். அவர்கள் அருகில் வந்ததும் அப்பெண் தன் மகளல்லள் என்பதை அறிந்தாள். அவர்களை நோக்கித் தன்மகளை இவ்வழியே ஒரு தலைவன் அழைத்துப் போயுள்ளான். அவ்விருவரையும் வழியிடையில் நீங்கள் கண்டீர்களா? என்று கேட்டாள். அதற்குத் தலைமகன், "அடலேறு போன்றோனாகிய தலைவனைக் கண்டேன். அவனருகில் தலைவிவருவதை, நான் காணவில்லை, என் மனைவி அறிந்திருக்கலாம் என்று கூறி, பின் தன் மனைவியை நோக்கி, நீ அத்தலைவியைப் பார்த்திருந்தால் சொல்லென்று கூறினான். தன் மனைவியைத் தவிர மற்றவளை ஏறெடுத்தும் பாராத மனப்பண்பு தலைவன்பால் விளங்கியதையும், தன் கணவனைத்தவிர பிற ஆடவர் முகம் பாராத தலைவியின் பண்பாட்டையும் கீழ்க்காணும் பாடல் உணர்த்துவதைக் காணுங்கள்.

"மீண்டாரென உவந்தேன் கண்டுநும்மை இம்மேதகவே
பூண்டா ரிருவர்முன் போயினரே புலியூர் எனைநின்று
ஆண்டான் அருவரை ஆளியன்னானைக் கண்டேன் அயலே
தூண்டா விளக்கனையாய் என்னையோ அன்னை சொல்லியதே"

## அமுதும் சுவையும்

நாயக நாயகி பாவம் கலவி உரைத்தல் துறைகளிலேயே மேம்பட்டுத் தோன்றும். அங்ஙனம் வரும் துறைப்பாடல் ஒன்றைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்போம்.

''சொற்பால் அமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்
- திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று நான்இவ ளாம்பகுதிப்
பொற்பு ஆரறிவார்? புலியூர்ப்புனிதன் பொதியில் வெற்பிற்
கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே

நல்வினைத் தெய்வம் இத்தலைவியைக் களவின்கண் கூட்ட அமுதமும் அதன்கண் கரந்து நின்ற சுவையும் என்ன என் நெஞ்சம் இவள்கண் ஒடுங்கிற்று. யான் என்பதோர் தன்மை காணாது இருவர் உள்ளங்களும் ஒன்றாயின. இவ்வாறு தலைவியோடு யான் கூடிய ஏகாந்தப் புணர்ச்சிப் பேரின்பம் யாவரால் அறியப்படும்? என்பது இப்பாடற்பொருளாம்.

'நான் இவளாம் பகுதிப் பொற்பு' என்பது பேரின்ப நுகர்ச்சியாகிய சிவானந்தானுபவம் உயிரின் உணர்வு சிவத்தின் வேறாய் நில்லாது அதன்கண் அழுந்தி ஒடுங்கிய வழியே உளதாம் என்பதைத் தெரிவிக்கிறது. 'நான் இவளாம்' என்ற தொடர் ''நான் பிரமமாகின்றேன் எனவும், அது நீ ஆகின்றாய் எனவும் வரும் உபநிடத மகா வாக்கியங்களின் பொருளையும் அறிவுறுத்தி நிற்கிறது. நீ வேறு நான் வேறெனாது சிவானந்தத்தில் அழுந்தும் இந்நிலையைச் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன் என்று திருவாசகத்துள்ளும் அடிகள் உரைத்தருளுவார்கள்.

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள்சைவ நீதி விளங்குக! உலக மெல்லாம்.



அச்சுப்பதிவு:
பாலா அச்சகம், காரைநகர்.
[இலங்கை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org